உ

கடவுள் துணை.

வித்தியாபாநு.

மதுரையில் பிரசுரமாகும்

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தொகுதி ௬. { ஆனந்த ௵ ஐப்பசி ௴ } பகுதி ௭.

முத்து.

(172-ம் பக்கத் தொடர்ச்சி.)

இவ்விஷயத்தைப் பற்றிச் சொல்லப்புகுமுன் இதனை வாசிப்போர் அறியவேண்டிய முதலாவது சங்கதி ஒன்று உளது. அஃது யாதெனில்—உள்ளே ஒருசொட்டு நீர்கூட இல்லாமல் நன்றாய் உலர்ந்திருக்கும் அரிக்கும் சட்டி ஒன்றை எடுத்து ஓர் தொட்டி ஜலத்தில் தலைகீழாக வைத்து அமிழ்த்தினால் ஜலம் அச்சட்டிக்குள் சிறிது தூரம் சென்று மேற்கிளம்பு மன்றி முழுவதும் உட்புகுந்து அதனை நிரப்புவதில்லை. அச்சட்டியை அசைக்காமல் அஃதிருந்தபடியே மேலே தூக்கி ஜலத்தினின்றும் எடுத்துப்பார்த்தால் இவ்வுண்மை இனிது விளங்கும். அசசட்டியி னுட்புறத்தில் வாயு நிறைந்திருத்தலே அதனுள் ஜலம் ஏறுததற்குக் காரணமாகும் என்பதே.

இம்மர்மத்தை அநுசரித்து (Halley) ஹால்லி என்ற ஓர் ஆங்கிலேயன் குளிமணி ஒன்று முதல்முதல் இயற்றினான். அஃதொரு பிரமாண்ட கோவில்மணி போன்றது. மரத்தினால் ஆகியது. அம்மணியின் உட்புறத்தில் முழுகுவோர்கள் உட்காரப்பீடங் கொண்டது. அப்பீடங்களில குளிகாரர்கள் பாதாதி கேசபரியந் தம் ஜலத்தை உள்ளே புகவிடாத ஓர் வகைக் கவசம் பூண்டு உட்கார்ந்து கொள்ளுவார்கள். அதன் பின்னர் அம்மணியின், வாய், கீழ் நோக்கும்படி வைத்து அதனை ஜலத்துள் மெதுவாகப் படகிலுள்ளோர் இறக்குவர். மணிக்குள் வாயு நிரம்பி இருக்கும் காரணத்தால் நீர் உள்ளே சென்று நிரம்பாது. மணிக்குள் இருப்பவர்

விடும் மூச்சு சீக்கிரத்தில் விஷக்காற்றாக மாறுதிருக்கவும் சுவாசம் தாராளமாய் விடவும் போதுமான சுத்தவாயு பீப்பாய்களின் மூலமாய் முன்னுக்கு முன்னாலேயே இறக்கிவிடப்பட்டிருக்கும். அப்பீப்பாய்களிலிருந்து அவற்றுடன் பொருத்தப்பட்டிருக்கும். தோற்குழாய்களின் மூலமாய் மணிக்குள் இருப்போர்க்குச் சுத்தவாயு கிடைத்துக் கொண்டிருக்கும். இம்மணியிலும் சிற்சில குறைகள் இருந்தன. ஆனால் காலம் செல்லச்செல்ல ஸ்மீட்டின் முதலிய சாஸ்திர பண்டிதர்களின் ஆராய்ச்சி வன்மைக்கும் மதிநுட்பத்திற்கும் தக்கவாறு, குளிமணிகள் சதுரவடிவாயும் முழுகுவதற்கான வசதிகள் யாவும் குறைவற வாய்ந்தவைகளாயும் இரும்பினால் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

ஆதலால் மேலைத்திசையோராகிய வெள்ளையர்கள், கோவணத்துடன் மூழ்கிக் கஷ்ட நிஷ்டூரங்களுக்குள்ளாகக் கூடிய நிலைமையிலுள்ள இந்திய குளிகாரர்களைப் போல, சிரமப்படாமல் மிகுந்த சௌகரியத்துடன் உடைதரித்தே முழுகக்கூடும். ஆயினும் இந்திய சிங்களவர்களே, சாமர்த்தியத்திலும், சாதுரியத்திலும் மேற்றிசையோரினும் மிகப்பேர்போனவர்களென்று சொல்லவேண்டும். ஏனெனில், இன்னோர் தம் கால்விரல்களைக் கொண்டே வெள்ளையர்கள் தம் கைவிரல்களால் பிடுங்கி எடுக்கும் பொருள்களை அவர்களினும் அதிதீவிரமாயும் எளிதாயும் எடுப்பார்கள். நிற்க.

பாலினீஷியாவில் உள்ள குளிகாரர்கள் கற்களின் உதவியின்றியே கடலில் மூழுகுவார்கள். இவர்களுள் ஆடவர்களினும் பெண்டிரே முழுகுவதில் சாமர்த்தியசாலிகளாம்.

6 - முத்தின் குணவிசேஷங்கள்.

முத்தின் பரிமாணம் அது பக்குவமாகச் செல்லும் காலத்திற்கேற்ப வேறுபடும். சாதாரணமாகச் சிப்பிகள் பருவமடைய நான்கு வருஷங்களும் பூரணபக்குவமுற ஏழு வருஷங்களுமாகும். உஷ்ணப்பிரதேசத்தில் காணப்படும் முத்துக்களே நேர்த்தியாயும் பருமனும் மனோகரமான குளிர்ந்த ஒளியுடனும் விலை மிகுந்தனவாயும் இருக்கின்றன. குளிர்ச்சியான தேசங்களிற் காணப்படுவன சிறு முத்துக்களே.

நக்ஷத்திரங்கள்போல ஒளியும், உருட்சியும், காற்றேறு, மண்ணேறு, கல்லேறு, நீர்நிலை முதலிய குற்றமில்லாமையும், கையினால் எடுத்தால் கெட்டியாயிருத்தலும் கண்ணுக்கு நன்றாயிருத்தலும், ஸ்படிகம்போல் இருத்தலும் உயர் நன் முத்தின் குணங்களாம். இவ்வாறு குணங்களும் ஒருங்கமைந்த முத்துக்களை அணிந்தால் மூதேவியும், தரித்திரமும், அணிபவரைவிட்டு நீங்குமென்றும், லட்சுமியும், செல்வமும், ஆயுளும், பிரபலிக்குமென்றும் பெரியோர் கூறுவர்.

உடுத்திர ளனைய காட்சி உருட்சிமா சின்மை கையால்
எடுத்திடில் திண்மை பார்வைக் கின்புறஸ் படிக மென்ன
அடுத்திடும் குணம்ஆறு, இன்ன அணியின்மூ தணங்கோ டின்மை
விடுத்திடும்; திருவந் தெய்தும் விளைத்திடும் செல்வம் வாழ்க்கை.

திருவிளையாடற் புராணம்.

எவ்வளவுக் கெவ்வளவு வெண்மை, பளபளப்பு, திரட்சி, களங்கமின்மை, நல்லநீர் முதலியவற்றுடன் கூடி ஒரு முத்து இருக்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு அது விலையுயர்ந்ததாகும். ஏறக்குறைய ஓர் அங்குல கனமும் இரண்டங்குலத்திற் கதிகமான நீளமும் உள்ள முத்து ஒன்று அராபியாவில் பதினொரு லட்ச ரூபாய்க்குச் சமீபத்தில் வாங்கப்பட்டது. சர்வ லக்ஷணங்களும் பூரா அமைந்த முத்து இந்திய முத்தே என்று தெரிகிறது. இம்முத்தில் ஒன்று தற்காலம் மாஸ்கோ (Moscow) பொருட்காட்சி சாலையில் வைக்கப்பட்டிருக்கிறது. இதன் எடை, 28 காரெட்டுகள்.

7–முத்தின் குற்றங்கள்.

“ தங்கிய முள்ளேறு, முகம் கறுத்தல், செந்நீர்
சார்வன, மண்ணேறு இடப்புத்திருகல், கோணை
மங்குறு சிப்பிப்பற்றுக் காகவன்னி,
மருண்டிருத்தல் ” என்னும் பத்துக் குற்றங்கள் முத்துக்கு உண்டெனத் திருவால வாயுடையார் திருவிளையாடற் புராணமுடையார் கூறுகின்றார்.

8-முத்தின் அழிவும் அதனை உயிர்ப்பிக்கும் விதமும்.

முத்து உயிருள்ள பிராணியிடத்துத் தோன்றிய உயிரற்ற பொருளாக இருந்தும் அதற்கு அழிவும் இறப்பும் உண்டு. முத்து

க்ஷீணிக்கும் என்றவிஷயம் நமதுமுன்னோர் நன்கறிந்திருந்தனர். மேற்றிசையோர்க்கு இவ்விஷயம் வெகுகாலமாகத் தெரியாது. சமீபத்தில்தான் அவர்கள் இவ்வுண்மை அறியலாயினர். முத்தின் அழிவிற்குக் காரணம்பல. அவற்றுள் சிலகூறுவாம்:—முத்துக்கு ஊட்டம் கொடுத்துக்கொண்டே யிருக்கவேண்டுமாம். உயிர்ப்பிராணிகள் உணவில்லாமற்போனால் வாடிவருந்திச்சாதல்போல் முத்தும் உணவில்லாவிடில் வரவர வளமை வனப்பாகிய குன்றி வாடிச்சாகுமாம். மெல்லியலாரின் மிருதுவான தோலின்கண் உள்ள ஓர்வகையுயிருள்ள சத்தையே முத்து உணவாகக்கொண்டு பிழைக்கின்றதாம். முத்தைஸ்திரிகள் சதைப்பற்றுள்ள இடங்களிலேயே அணிந்துகொள்ள வேண்டுமென்று ரதனப்பரீக்ஷகர் கூறுவதை நாம்நாளும் கேட்கின்றோமன்றோ? ஆயினும் முத்துத் தரித்துக்கொள்ள யோக்யதையே இல்லாதசில ஸ்திரீகள் உளர். ஏனெனில், முத்துக்களுக்கு ஸ்பரிச உணர்ச்சி மிகுதியும்உண்டு. ஆதலின் அவற்றைத் தரித்துக்கொள்ளும் ஸ்திரீகளின் மார்பாதிய இடங்களில் அவற்றின் ஆகாரத்திற்கு வேண்டியன வாகூதனவும் அவைகட்கே தீமைசெய்வனவுமான வஸ்துக்கள் இருக்குமாம். இஃதுண்மையென்பதை வேறுசில விஷயங்களைக்கொண்டு விளக்கிக்காட்டலாம். வைடூரியத்தைச் சிலஸ்திரீகள் அணிந்தால் என்னஜ்வலி ஜ்வலிக்கிறது? அதே கல்லை வேறுசில ஸ்திரீகள் அணிந்தால் அது உயிரற்ற களிமண்ஆகிவிடுவதைக் காண்கின்றோமன்றோ?

ஆகவே, முத்துமுதலிய இரத்தினங்கள் மங்கிச் சாவதற்கும் "டால்" வீசி ஜ்வலிப்பதற்கும் ஸ்திரீகளின் அங்கவியலே காரணமென நன்கு தெரிந்துகொண்ட மேற்றிசை ரதன வியாபாரிகள், சில தக்கஸ்திரீகளை ரதனம் அணிந்துகொள்வதற்கென்றே கூலிகொடுத்து வேலைக்கு அமர்த்தியிருக்கிறார்கள். ஆ! இவர்கள் எவ்வளவு பாக்யசாலிகள்! முத்தை அணிவதற்கு அருகதல்லாதஸ்திரீகளிடமிருந்து, அவர்கள் அணிந்ததால் மங்கி நிறங்கெட்ட முத்துமாலையை மிகக்குறைந்த விலைக்குவாங்கி அம்மாலைகளையும், தம்மால் ஏற்கனவேபுதிதாய் வாங்கப்பட்டும் ஊட்டமில்லாக் குறையால் வாடி நிறங்குன்றி யிருக்கும் மாலைகளையும் இத்தக்கூலிக்கார ஸ்திரீகளுக்கு அணிந்து முத்தைக் கூடியமட்டும் முன்னிலையுறச் செய்து விற்றுப்

பெருலாபம் பெறுவர். இம்மர்ம்மத்தை அறிந்தபிரபு பத்னிகள் பலர் தாம்முத்துக்கள் அணியத் தகுதியற்றவர்களெனக் கண்டுகொண்ட போதெல்லாம் அவற்றைச் சிலகாலம் தமது தோழிமார் மார்பிற் பூட்டிவைத்திருந்து, அவர்கள் அணிதலால் அவற்றிற்குக் காந்தியும் பளபளப்பும் வந்தவுடன், தாம் அணிந்து வருகின்றனர். நிற்க.

தக்க ஸ்திரீகள் அணிந்துங்கூட, துலக்கமுறுது க்ஷீணிக்குந் தன்மையுள்ள முத்துக்களுமுண்டு. இத்தகைய முத்துக்களை உயிர்ப்பிக்க இரத்தினப்பரீக்ஷையில் தேர்ந்தோர் ஓர் உபாயம் செய்து பார்ப்பர். இவ்வுபாயத்தால் பெரும்பான்மையும் காரியசித்தியுண்டாகும். அவ்வுபாயமாவது:—கடல்நீர் தாராளமாக உட்புகுந்து ஓடிக்கொண்டிருக்கும்படியாய் இடுக்குகள் பல வாய்ந்திருக்குமாறு இருப்புக் கம்பிகளால் இணைத்துச்செய்த ஓர் கூண்டில் முத்துக்களை சாவதானமாய் வைத்து அக்கூண்டைக் கடல்நீரிற் சிலமாதங்கள் அமிழ்த்தி வைப்பதே. இவ்வாறுசெய்தால் ஒளிகுறைந்த முத்துக்கள் முன்போற்பிரகாசமுறும் என்பதற்குப் பின்வரும்விஷயங்களே போதிய சான்றாகும்.

நமது மாஜி மகாராணியாகிய அலெக்ஜாண்டிராவுக்கு முத்துப் பைத்தியம் மிகுதியும் உண்டாம். அவர் சேர்த்துவைத்திருக்கிற மாதிரி பலவகைப்பட்ட முத்துக்கள் எவருமே இதுவரை சேர்த்து வைத்ததில்லையாம். அவருக்கு, முத்துக்கிரீடமும்முத்துஉடையும் முத்து அரைக்கச்சுமுண்டு, அவர்பாதாதிகேசபரியந்தம் முத்துடை தரிக்குங்கால் அவரிடம் காணப்படும் முத்தைமதிப்பிட்டால் நான்கு லட்சம்பவுன் ஆருமென்று கூறுகின்றனர். இவற்றைத் தவிர இனி உருப்படாதுஎன்று ஒதுக்கப்பட்டவை இரண்டுலட்சரூபாய் பெறும்படியான முத்துக்களாம். இவை தரித்துக் கொள்ளாமல் உள்ளே வைக்கப்பட்டதால் கேடுற்றவைகளாம். சமீபத்தில் அவருடைய முத்தாரம் ஒன்றுநிறம்மங்கிப் பிணியுற்றதாம். ஓர் பிரபல ரத்னப்பரீக்ஷகனிடம் அது கொண்டுபோகப்பட்டபோது அதை அவன் பரீக்ஷித்தறிவதாய்ச் சொல்லிப்பெற்று எவரும் அறியாமல் முன்புகூறிய சொல்லியபடி ஓர் கூண்டில்போட்டு சமுத்திர ஜலத்தில் மூன்றுமாதம் போட்டுவைத்திருந்து பிறகு எடுத்துப்பார்த்தபோது

அதுகுறையேதுமின்றி முத்துக்குரிய லட்சணங்கள் யாவும்பூரா் அமைந்து முன்போல் ஜ்வலித்துக்கொண்டிருக்கக்கண்டு, அதிகசந் தோஷத்துடன் அதனை அரசியிடம்தந்து பரிசுபெற்றனும்.

இது சம்பந்தமாக மற்றுமோர் உதாரணங் கூறி முத்து நோயைப் பற்றிய விஷயத்தை நிறுத்துவோம். சமீபத்திற் காலம் சென்ற ஆஸ்திரியா தேசத்து ராணியாகிய எலிஸபெத் அஸ்திஜ்வர (Typhoid Fevs) த்தினால் வருந்திக் கொண்டிருந்த போது, பலகோடி பவுன் விலையுள்ள அவள் முத்துமாலை நிறங்குன்றிக் கறுக்க ஆரம்பித்தது. உடனே அது ரத்னப்பரிசோதர்களால் எட்டிரியாடிக் கடலில் ஓர் குறிபிட்ட இடத்தில் கொண்டுபோய்ப் போடப் பட்டது. அன்று முதல் காலைவரை அம்முத்து மாலையை கவர்ன்மெண்டாரின் கடற்படை இரவும் பகலும் காத்து வருகிறது. இவை சரித்திர பூர்வமாக நம் நாலத் தவர்களை நன்கறிந்த விஷயமாகும். ரத்ன சோதனை நிபுணர்கள் அம் முத்தாரம் முன் இருந்த நிலையையுற மூன்று வருஷங்களாவது ஆகவேண்டுமென அபிப்பிராயப் படுகின்றனர். இது நிற்க.

முத்திற் குறும் பிணியையும் அதற்கான நிவர்த்தியையும் பற்றி நாம் கூறிக்கொண்டு வரும் போது ஓர் பரிதாபகரமான விஷயம் நம் ஞாபகத்திற்கு வருகிறது. அதனை நமது நேயர்களுக்கு அறிவிக்காமல் இருக்க மனம் வரவில்லை, அவ்விஷயம் வருமாறு.

பிரான்ஸ் தேசத்து ராஜ தந்திர நிபுணராகிய தியாஸ் (Thiers.) என்பவரின் மனைவிக்கு 7, 50. 000 ரூபா பெறும் படியான முத்து மாலை ஒன்றுண்டு. அம்மாலை அந்நாட்டாருக்கு அவ்வம்மையின் ஞாபகார்த்தமாகக் கொடுக்கப்பட்டு விட்டது. இப்பொழுது அது லவர் (Lowver) பொருட் காட்சி சாலையிலிருந்து அதற்கு எவ்வாறு முணர்ந்து அறிந்து கொள்ள முடியாத ஓர் நோய் பற்றி நாளுக்கு நாள் க்ஷீணித்து வருகிறது. ஆதியில் 7,50,000 ரூபா பெற்ற அம்மாலை இப்பொழுது 5000 ரூபாய் கூடப் பெறுமெனெ ரத்தினப் பரீக்ஷகர் கருதுகின்றனர். இவ் ஹாரத்தை உத்தமஸ்திரீகள் அணிந்தால் ஒருவேளை அழிந்து இறந்த முத்துக்கள் போக அழியாது எஞ்சிய சிலவேனும் முன்போல் ஒளிபெற்றுப் பிழைக்குமென்று மேனாட்டு நிபுணர்கள் எவ்வளவோ சிபார்சு செய்தும் அவ்வாறு செய்யக் கூடா

மல் இருக்கிறது. ஏனெனில், விநோதரச மஞ்சரியில் பரமார்த்த குருவின் வாக்கைப் பரிபாலனம் செய்த அவரது சிஷ்யர்களைப் போன்று பிரஞ்சு கவர்ன்மெண்டாரும் தியர்ஸ் அம்மையின் வாக்கைப் பரிபாலனம் செய்து வருகிறார்கள். அம்முத்து மாலை அது வைத்திருக்கப்பட்ட பெட்டியை விட்டு எக்காலத்தும் எக்காரணத்தை இட்டும் எடுபடக் கூடாது என்ற நிபந்தனையின் பேரில் அவ்வம்மையால் கொடுக்கப்பட்டிருப்பதால் அவர்கள் அதனை அதனிருப்பிடத்திலேயே வைத்து அநியாயமாய் அழிந்து சாகவிட்டு வருகின்றனர். அந்தோ! தியர்ஸ் அம்மை என்ன நோக்கத்துடன் அந்த நிபந்தனை ஏற்படுத்தி யிருக்கக் கூடும் என்பதை இவர்கள் யோசிக்கவில்லையே. நாளுக்கு நாள் அம்முத்துக்கள் கறுத்து செத்த ஆட்டுப் பல்லின் நிறமடைந்து வருகின்றனவாம்.

9-உபயோகங்கள்.

(1) முத்து உலக தேசத்தாராலும் ஆடவர், பெண்டிர், இளையோர், முதியோர் என்ற ஏற்றத்தாழ் வின்றி அலங்காரத்திற்காக அணியப்படுகிறது. பெண்கள் புல்லாக்கு, கொப்பு மூக்குத்தி, முதலிய ஆபரணங்களில் அவற்றைப் பதித்தும் மாலையாகக் கோத்தும் அணிவர். சிலர் கடுக்கன், மோதிரம் முதலியவைகளில் அவற்றை கட்டி அணிவர். சுவாமிகளுக்கும், ராஜர்களுக்கும் செய்யப்படும் கிரீடங்களில் முத்தை விசேஷமாகக் காணலாம். (2) இஃதொரு அரிய வியாபாரச் சரக்காக இருப்பதால் வணிகர்க்கு இதனால் பெருத்தலாப முண்டு. (3) முத்து ஓர் வைத்யப் பொருளாதலின் பொடி முத்துக்களைச் சீனரும் இந்தியரும் புடம் போட்டுப் பிற மருந்துடன் கூட்டி விற்றுப் பணம் பெறுவர். (4) மேற்றிசையோரிற் பலர் பவளத்தைக் கொள்வது போலவே சிலர் மலடு நீங்கவும், திருஷ்டிகழியச் செய்யவும் கூடிய ரக்ஷையாகக் கருதி முத்தை உபயோகிக் கின்றனர். (5) நகைகளுக்கு உபயோகிக்க முடியாத கடுகு போன்ற விரைமுத்துக்களைச் சிலதன வான்கள் வாங்கிச் சுட்டுச் சாம்பலாக்கித் தாம்பூலத்துடன் அருந்துவர்.

(6) தென் ஐரோப்பாவிலுள்ளோர் முத்துடன் சில பொருள்கள் சேர்த்து ஓர் வகைத் தைலம் எடுத்து அதனை முகத்திற் பூசிக்

கொள்வார்களாம். அவ்வாறு செய்தலால் அவர்கள் நரைத் தலையாகுங் காலத்தும் முகத்திரை காணுகாம். (7) முத்துச் சிப்பிகள் நானுவித பொத்தான்கள் செய்யவும் அநேக விதமான அலங்கார வேலைகள் செய்யவும் உபயோகமாகும். நிற்க.

10. நீத்தில முணர்த்தும் நீதிகள்.

இனி முத்து சம்பந்தமாய்த் தாமாக விளங்கக்கூடியவையும் அன்றி உய்த்துணர வைக்கத்தக்கவையுமான அரிய நீதிகள் சில இங்குரைத்தல் மிகையாகாதென்று எண்ணுகிறோம்.

(A) "அளவிடவும் முடியாத——உத்தமர்கள்
உறைவர் பலர்" என்றறியலாம்.

(B) "பொங்கு திரைக்கடல் மேல்..........
உத்தமகுணம் வெளியாகும்".

இதன் கருத்தென்ன எனில், சமுத்திரத்தில் பார்ப்போர் கண்ணுக்கு எளிதில் தென்படுவன அதில் மிதக்கும் இழி துரும்புகளே. அதுபோல ஒருவனுடைய தவறுகளே மேலெழுந்த பார்வையுடன் நோக்குவார் கண்ணுக்குப் புலப்படும். ஆனால் அதில் முத்தை நாடுவோன் அப்புன்துரும்புகளைப் புறம்பே தள்ளி அடியில் ஆழ்ந்து நோக்கல்போல் நோக்கினால் தான் அவனுடைய நற்குணங்கள் நன்கு விளங்கும் என்பதே.

(C) விலையேறப்பெற்ற நன்முத்து உவர்நீரும் புலால் நாற்றமும் கொண்ட கடலில் சிப்பி வயிற்றில் தோன்றுவதுபோலவே நற்குண நற்செய்கையுடைய பெரியோர்கள் இழிகுலத்திலும் தோன்றுதல் இயல்பு. இதுபற்றியன்றோ "கள்ளிவயிற்றி னகில் பிறக்கு——நல்லாள் பிறக்குங்குடி" என்னப்பட்டது.

(D) நத்தையின் வயிற்றிலும் முத்துப் பிறக்கும் என்ற பழமொழியும் இவ்வுண்மையை வலியுறுத்துகின்றதென்னலாம்.

(E). "ஆக்குமறிவானலது பிறப்பினால்
மீக்கொளுயர் விழிவு வேண்டற்க"

என்ற நீதியையும் முத்து கற்பிக்கின்றது.

எவ்வாறெனில் முன்பு உரைத்தபடி "சேயார் முகத்துச் சென்றுதைக்கும் கழிமுடைப் புன்புலால் நாற்றம்" புறம் பொதிந்தும் அகம் வதிந்தும் உள்ள சிப்பியில் தோன்றிய காரணத்தால் முத்தை இழிவுபடுத்துவார் எவருமிலர். அதன் உயர்வையே எவரும் பாராட்டுவர். அதுபோல, அறிவு ஒழுக்கங்களிற் சிறந்த பெரியோர்கள் இழிகுலத்திற் றோன்றினும் அவர்களது குணம் செயல்களைப் பற்றிப் பாராட்ட வேண்டுமேயன்றி அவர் தோன்றிய குலத்தின் இழிவு பற்றி இகழலாகாது. நீதி வெண்பாவிலும், "தாமரை பொன் முத்து ——————எங்கே பிறந்தாலு மென்" என்று கூறியிருத்தல் காண்க.

உயர்தர முத்து உண்டாதலைப் பற்றிய பர்த்திருஹரியாரின் அபிப்பிராயம் உண்மையாக இருக்குமாயின் வேறு சில நீதிகளும் நாம் அறியலாகும். உதாரணமாக:—

(F) மழைத்துளி பொன்று பழுக்கக் காய்ச்சிய இரும்பிற் படுமாயின் தன் உருவுமே தெரியாமல் மறைந்து சுவறுகின்றது. அதே மழைத்துளி தாமரை யிலைமேல் படுமாயின் நீர் உரு நீங்கி முத்தின் உருக்கொண்டு விடுகிறது. அம்மழைத்துளி ஆடி மாசம் சுவாதி நட்சத்திரம் உச்சத்திலிருக்கும் பொழுது சிப்பியின் அகட்டில் விழுமாயின் மிக்கவனப்பும் விலையும் வாய்ந்த முத்தேயாகிறது; இதனால் அறிவும், பெருமையும், கொடையும், நட்பும், அதமர்சேர்க்கையால் அபர்சயமும் அழிவும், மத்திமர் சேர்க்கையால் மகிமைத் தோற்றமும், உத்தமர் சேர்க்கையா லுயர்ச்சியும் பெருமையும் உறலாகும் என்பது புலப்படும். இவ்வாறே அநேக பாத்திரத்தைப் பற்றிச் சொல்லுங்காலையில் பர்த்ருஹரியார்

"காய்ந்தகரும் பொன் வாவிக் கமல இலை கடற்சிப்பி
தோய்ந்த நீர்பெயர்கடல்,மேல்தோன்றல்முத்துத்தோன்றிடல்போல்
வாய்ந்த தமன் மத்திமன் உத் தமர் தம்பால் மருவினர்கள்
ஆய்ந்து மேற் சொன்ன படி அனுபவிக் கப்பெறு வாரே.

எனக்கூறியிருக்கின்றனர். நிற்க.

(G) "முன் சொல்லியபடி சிப்பி குறித்த காலத்தில் மழை நீரைக் கிரஹிப்பதற்காகக் கடலின் அடியிலே உள்ளே தனது இரு

ப்பிடத்தை விட்டு மேலே கிளம்பி வந்து தன் ஓட்டை அகலத்திற ந்துகொண்டு மிதந்த வண்ணமாய் இருக்கையில் சுவாதி நட்சத்திர த்து மழைத்துளி அதில் விழவும் அது தன் பழைய இடம் சேர்ந்து தான் உட்கொண்ட நீர்த்துளியி னின்றும் அழகிய முத்தை உண் டாக்குவது போல் சில முமுட்சுக்கள் மோட்சத் துவாரத்தின் கத வைத் திறக்கவல்ல மூல மந்திரத்தை உபதேசிக்கும் திறன் வாய்ந்த சற்குருவை பற்பல இடங்களிலும் விடாமுயற்சியுடன் தேடித் திரி கையில் அவர்களுள் ஒருவன் அதிர்ஷ்ட வசத்தால் அத்தகைய குருவை அடைந்து, தான் வெகுகாலம் ஆவலாய் விரும்பி இருந்தும் எல்லாவித பந்தங்களையும் சேதிக்க வல்லதுமான ஞான உபதேச பாக்யத்தைப் பெற்று சம்சாரிகளின் சங்கத்தினின்றும் விலகி தனது ஹிருதய குகையில் தியான யோகத்தில் அமர்ந்து சாசுவதமான சாந்தியைப் பெறுகிறவரையில் அதே நிலையில் இருக்கிறான்." என்ற ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரின் உபதேச மொழியும் உய்த்துண ரத் தக்கது.

இவ்விதம் சிருஷ்டியில் ஒவ்வொரு பொருளும் சிந்திப்பதற் காம் சிறப்புடையது. சற்குணமுடையோர் சற்றும் பயனிலா அற் பப் பொருளிலும் அறநெறி காண்பர்.

இன்னும்வரும்

ம. கோபாலகிருஷ்ணையர்.

பத்திராதிபர்.

அன்பு.

(176-ம் பக்கத்தொடர்ச்சி.)

இன்பம்:—இன்பம் என்பது பொருளைத் துணைக்காரணமாகக் கொண்டு இம்மையே இன்பம் பயப்பதாகிய காம இன்பமாம். காமச் சுவையை அநுபவித்தற்கு அன்புடைமை இன்றி யமையாதது என்பதை இயம்பவும் வேண்டுமோ. "கருமணியிற் பாவாய் நீ போதாய், யாம் வீழுந் திருநுதற்கில்லையிடம்" என்னும் குறட்பாவும் இதனைக் குறிக்க எழுந்ததே யன்றோ?

மக்கண் மாட்டே யன்றி விலங்கு, பறவை முதலிய ஏனைய உயிர்கண் மாட்டும் அவ்வன்புடைமை மிகச் சிறந்தது. சிபிச் சக்கிரவர்த்தி என்பான் தன்னைச் சரண்புகுந்த புறாவைக் காத்தற் பொருட்டுத் தனது உடலினின்றும் தசையை அறுத்துத் தந்தான் எனின் அவனுடைய அளவிலா அன்பின் பெருக்கை எவ்வாறு வியந் துரைப்பது? அவ்வரசர் பெருமான் தனக்கே யன்றி, தன் குலத்தவர்க்கும் பெரும் புகழை நிறீஇனவனுமினான். எவ்வாறெனின், தயரதச் சக்கிரவர்த்தியின் உயிர் குடிப்பிறப்பைக் கலைக் கோட்டு முனிவற்கு உணர்த்துவான் புகுந்த உரோமபத மகாராஜன் "புறவொன்றின் பொருட்டாகத் துலைபுக்க பெருந்தகை தன் புகழிற் பூத்த, அறனென்று திருமனத்தான்" எனச் சிபிச்சக்கிரவர்த்தியை வியந்து கூறி அவன் அன்பின்பெருக்கைப் புலப்படுத்தினான் எனின் அன்புடைமையினும் ஏற்ற முடையது யாது? இவ்வன்புடைமையானே, இவ்விராஜதானியின் தலைநகராகிய சென்னைபம் பதியின் கண்ணும் ஜீவஹிம்சை நிவாரண சங்கம் (Society for prevention of Cruelity animals) ஒன்று ஏற்பட்டு விலங்கு, பறவை முதலியவைகட்கு உண்டாகும் துன்பத்தை விலக்க முயல்வதை அறியாதார் யாவர்? இதன் கிளைச் சங்கங்கள் பல்வேறு இடங்களிலும் பரவி யிருக்கின்றன.

பதி அன்பு:—இதுகாறும் மனைவி மக்கள் நண்பர் முதலியோர் மாட்டுச் செலுத்தும் பசு அன்பை விவரித்தாம். இனிப் பரமபதியாகிய ஈசுவரனிடத்திற் செலுத்தும் அன்பை விவரிப்பாம். அன்பு, பத்தி காதல் என்பன ஒரு பொருளைத் தரும். சிறுபான்மை வேற்றுமையுடைய சொற்களாம். அவை பற்று என்னும் பொருளைக்

குறிக்கும். பற்று எனவே பற்றும் பொருளும் பற்றப்படும் பொருளும் பற்றுத் தொழிலும் வேண்டப்படும். படவே பற்றுத லென்பது மனத்தைக் கருவியாகக் கொண்டு நிகழு மென்றும்; பற்றுவது உயிரென்றும் பற்றப்படுவது பாசம் பதி என்னும் இரண்டு பொருளென்றும் பெறுதும். நமக்கு இனியவரென்று நம்மால் விரும்பப் பட்டோர் யாவரோ அவரிடத்து உண்டாம் உள்ள நெகிழ்ச்சியின் தொடக்கமே பத்தி எனப்படும். அப்பத்தி மீதூர்தலே காதல். அதில் வேறற அழுந்துதலே அன்பு. இவையே, பத்தி, காதல் அன்பு என்பவற்றிற்குள்ள வேறுபாடாம்.

நமக்கு இனியவர் யாவரோ அவரிடத்தே விருப்பம் உண்டாம் என்று மேலே கூறினும். நமக்கு இனியவர் யாவரென ஆராய்வாம். மனைவி, மக்கள், தாய், தந்தையர், உறவினர் ஆகிய இவர் இனியரெனக் கொள்ளின் இவ்வுடம் பொழியவே அவர்களுடைய தொடர்பு நீங்குதலின் நமக்கு இனியவராவது யாங்ஙனம்? இதுவே யன்றி இவ்வுடம்போடு கூடிய வழியும் இவ்வுறவினரே பல காரணங்களால் பகைவராதலையும் காண்டும். இதனை "எத்தாயர் எத்தந்தை எச்சுற்றத்தார், எம்மாடு சும்மாடா மேவர் நல்லார், செத்தால் வந்துதவுவார் ஒருவரில்லை சிறு விறகாற் றீமூட்டிச் செல்லா நிற்பர்" என்னும் தமிழ் மறையும்

இல்லும் பொருளும் இருந்த மனையளவே
சொல்லு மயலார் துடிப்பளவே—நல்ல
கிளைகுளத்து நீரளவே கிற்றியே நெஞ்சே
வளைகுளத்து வீசனை நீ வாழ்த்து.

என்னும் ஐயடிகள் காடவர்கோன் நாயனார் அருமைத் திருவசனமும் வலியுறுத்தும். இதனால் தாய் தந்தை முதலாயோர் நமக்கு இனியவராகா ரென்பது பெறப்பட்டது. நமக்கு நாமே இனியமெனக்கொள்ளல் ஏலாதோ வெனின், ஆராய்வாம். ஆன்மா கேவலாவத்தையிலே ஆணவ மலத்தான் மறைப்புண்டு அறிவும் தொழிலும் விளங்காமையினும், சகலாவத்தையிலே அறிவும் தொழிலும் உள்வழியும் அவை சிற்றறிவு சிறு தொழிலாய் முடிதலானும், இன்பம், இது, துன்பம் இது எனப் பகுத்தறிந்து இன்பத்தையே யடை

யும் நுண்ணறிவின்மையானும் நமக்கு நாமே இனியமெனக்கொள் ளல் யாண்டைய தெனக. ஆகவின் முற்றறிவு முற்றுத் தொழிலு டைய பரம்பரனே நமக்கு இனியராவர் என்பது தானே போதரும். இக்கருத்தினையே.

"என்னில் யாரு மெனக்கினி யாரில
என்னினும் மினியா னொருவன் னுளன்
என்னுளே வுயிர்ப் பாய்ப்புறம் போந்துபுக்
கென்னுளே நிற்கு மின்னம் பரீசனே"

என்று திருநாவுக் கரசரும் திருவாய் மலர்ந்தருளினர். "எண்ண ரிய பிறவிதனின் மானிடப்பிறவிதான் யாதினும் அரிதரிது காண்" என எய்தற்கரிய மக்கட் பிறப்பை அடைந்தோர் யாவரும் பரம்பர னைப்பற்றலாய பற்றினையே மேற்கொண்டு மற்றப் பற்றுக்களை அற வே நீக்க வேண்டும் என்பது போதருகின்றது. எனெனில் பாசத் தைப் பற்றுதலால் பிறந் திறந்துழல்வதாகிய துன்பமும் பதியைப் பற்றலால் அத்துன்பம் நீங்கி யடைதலாகிய பேரின்பமும் எய்துத லின்; இதனையே பற்றுக பற்றற்றான் பற்றினையப்பற்றைப் பற்றுக் பற்று விடற்கு" எனத்திருவள்ளுவரும் வலியுறுத்தினர்.

இவ்வுலகில் ஒருவர் மற்றொருவர் மாட்டு அன்பு வைக்குங்கால் அவருக்கும் இவர் மாட்டு விருப்பம் நிகழ்வதே முறை. அங்ஙனம் அன்பு கலவாதாயின் அவ்வன்பு உண்மை யன்பு அன்று,போலியே யாம். இவ்வாறே முற்றறிவும், முற்றுத் தொழிலும் உடைய முத ல்வன் மாட்டு நாம் பற்றுவைக்குங்கால் அடியார் வேண்டிற்றே வேண்டும், அருட் பெருந் தனிக்கடலாம் அவனும் நம்மாட்டுப் பற் றுவையாதிரான். எவ்வாறெனின், "நெக்கு நெக்கு நினைபவர் நெஞ் சுளே, புக்கு நிற்கும்பொன் னார்சடைப் புண்ணியன்" எனவும். "பத்தி வலையிற் படுவோன் காண்க" எனவும். "ஆரேனும் அன்பு செயின் ஆங்கே தலைப்படுங்காண், ஆரே னுங் காணா வரன்" எனவும் ஆன்றோ ரருளினமையின் என்க.

அடியார் தம் அல்லல் தீர்க்கும் அருமருந்தாம் சிவபரம்பொரு ண்மாட்டு பசுக்களாகிய நாம் வைக்கும் பற்றிற்கும் அவர் பசுக்கண் மாட்டு வைக்கும் பற்றிற்கும் பேதமுண்டு. யாங்கன மெனின்,

நாம் இறைவனிடத்தில் வைக்கும் பற்றிற்கு அன்பென்றும், அவ்வி றைவன் நம்பாற் காட்டும் பற்றிற்கு அருள் என்றும் பெயர். இதனை:

அருளிருந்தவின் பாதமடைந்தவரான் பிருந்த நெஞ்சாலுள்ளி வாழ்த்தியு
மருவிருந்த மலர் தூய் வணங்கியும் மன்றுகாலங் கழித்தனர் நாயினேன்
உருவிருந்தயர்கின்ற பொய்வாழ்க்கையை யுன்னியுன்னி யுழன்றேமயங்கினேன்

என்னும் செய்யுள் விளக்கும். இன்னும் இவ்வுண்மையை யாரா யின், தாழ்ந்தோர் உயர்ந்தோர் மாட்டுவைக்கும் பற்றிற்கு அன்பெ ன்றும், உயர்ந்தோர், தாழ்ந்தோர் மாட்டுச் செலுத்தும் பற்றிற்கு அருளென்றும் பெயராதலைப் பெறுதும். இதனை, "அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம், புல்லார் புரளவிடல்" என் னும் குறட்பாவிற்கு ஆசிரியர் பரிமேலழகர் "அருளொடும் என் னும் பதத்திற்கு அரசன் குடிகண் மாட்டுச செய்யும் பத்தியையும் "அன்பொடும்" என்னும். பதத்திற்கு குடிகள் அரசன் மாட்டு வைக்கும் பத்தியையும் பொருளாகக்கூறி வலியுறுத்தினமைகாண்க.

இடையறுப்பேரின்பினலன்றி முத்தி யெய்துவது அரிதாக லின் அப்பேரன்பை அடைவான் ஆன்மாக்கள் செயற்பால நெறி நான்கு அவைதாம், தாத மார்க்கம், சற்புத்திர மார்க்கம், சகமார்க் கம், சன்மார்க்கம் எனப்படும் சரிசை, கிரியை, யோகம், ஞானம் என்பவையேயாம்.

தாதமார்க்கம் என்பதற்கு தாச நெறி என்பது பொருள். அது தான் சரியை, அடிமையானவன் தான் எஜமானனை அணுகாமலும் அகலாமலும் தனக்கு வேண்டிய தொன்றைக் காலநோக்கி வழி பட்டெய்துவது போல் எல்லாம் வல்ல பரம்பரன் திருக்கோயில் கொண்டிருக்கும் ஆலயங்கட்குச் சென்று திருவலகிடுதல், திருமெ ழுக்கிடுதல், நந்தவனம் வைத்தல், மாலைதொடுத்தல், சிவனடியாரைச் சிவனெனவே தெரிந்து வழிப்பட்டுய்யும் நெறியாம். இவர் சாலோக பதவி யடைவர். இதனை

"தாதமார்க் கஞ்சாற்றிற் சங்கரன்றன் கோயிற் றலமலகிட்டி லகுதிரு மெழுக்குஞ் சாத்திப், போதுகளுங் கொய்துபூந் தார்மாலை கண்ணி புனிதற்குப்பல சமைத்துப் புகழ்ந்து பாடித், தீதில்திரு விளக்கிட்டுத் திருநந்தவனமுஞ் செய்துதிரு வேடங்கண் டாலடி

யென்செய்வ, தியாது பணியீரென்று பணிந்தவர்தம் பணியு மியற் றுவதிச் சரியைசெய்வோ ரீசனுல கிருப்பர். என்னும் செய்யுள் காட்டும்.'

புத்திர மார்க்கம் என்பது கிரியை, புத்திரனானவன், அச்ச மில்லாமல் தந்தையின் சற்சமயம் பார்த்து நெருங்கி வேண்டுவதொன்றினைக் கேட்டுப் பெறுதல் போல ஆன்மா பரமபிதாவாகிய சிவனைப் பூசை செய்து இஷ்ட காமியங்களைப் பெற்றுஉய்யும்நெறியாம். இந்நெறியினின்றோர் அகத்தும் புறத்தும் சிவலிங்க ஆராதனை செய்வர். இதனை அனுட்டித்தோர் சிவசாமீப்பியத்தை யடைவர். இதனை

"புத்திர மார்க்கம் புகலிற் புதிய விரைப்போது
புங்க வொளி மஞ்சனமமுது முதல் கொண்டைந்து
சுத்தி செய்தாசனமூர்த்தி மூர்த்திமானுஞ்
சோதியையும் பாவித்தா வாகித்துச் சுத்த
பத்தியினு லருச்சித் துப்பரவிப் போற்றிப்
பரிவினொடு மெரியில்வரு காரியமும் பண்ணி
நித்தலுமிக் கிரியையினை யியற்று வோர்க
ளின்மலன்ற னருகிருப்பர் நினையுங் காலே"

என்னும் செய்யுள் விளக்கும்.

சகமார்க்கம் என்பதற்குத் தோழநெறிப் பயிற்சி என்பது பொருள். இதுவே யோகம், தோழனானவன் தன் நேசனை எவ்வாறு அச்சமின்றி நெருங்கித் தனக்குவேண்டிய தொன்றனைவெய்துவானோ அதுபோல ஆன்மா முழுமுதற் கடவுளை அடைந்து உய்யும் நெறியாம். இந்நெறியினின்றோர் பஞ்சேந்திரியங்களையும் புறத்திற்செல்ல வொட்டா தடக்கிப் பிராணாயாமத்தினல் மனத்தைத் தன் வயப்படுத்தி ஒரு குறியினிறுத்தப் பழகுதலாம். இதனை அனுட்டித்தோர் சாரூபம் பெறுவர். இதனை,

"சகமார்க்கம் புலனொடுக்கித் தடுத்துவளி யிரண்டுஞ்
சலிபபற்று முச்சதுர முதலாதா ரங்கள்
அகமார்க்க மறிந்தவற்றி னரும்பொருள்கள் உணர்ந்திங்
கணைந்துபோய் மேலேறி யலர்மதிமண் டலத்தின்

முகமார்க்க வழுதுட்ல முட்டத் தேக்கி
முழுச்சோதி நினைந்திருந்தன் முதலாக வினைகள்
உகமார்க்க வட்டாங்க யோக முற்றும்
உழத்தஅழர் தவர்சிவன்ற னுருவத்தைப் பெறுவர்"

என்னுஞ் செய்யுள் தெரிக்கும்.

சன்மார்க்க மென்பது ஞானமார்க்கம். முப்பொருளுண்மை கூறும் ஞானசாஸ்திரங்களை ஓதி, உண்மையுணர்ந்து, ஞானாசிரியனை யடுத்து, ஞானோபதேசம் கேட்டு, சிந்தித்து, தெளிந்து, நிட்டை கூடி சிவபரம் பொருளோடு இரண்டறக் கலந்து நிற்றலாம். இதனை:-

"சன்மார்க்கஞ் சகலகலை புராணவேத
சாத்திரங்கள் சமயங்க ளாம்பலவு முணர்ந்து
பன்மார்க்கப் பொருள்பலவுங் கீழாக மேலாம்
பதிபசுபா சந்தெரிந்துப் பரசிவனைக்கூட்டு
நன்மார்க்க ஞானத்தை நாடிஞான
ஞேயமொடு ஞாதிருவு நாடா வண்ணம்
பின்மார்க்கச் சிவனுட னும்பேற்றி ஞானப்
பெருமையுடை யோர்சிவனைப் பெறுவர் காணே"

என்னுஞ் செய்யுள் எடுத்துக் கூறும்.

மேற்கூறிய சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நாற் பதங்களுள்ளும் சரியை கிரியைகளை அநுட்டிப்போர் தாமும், தலைவனும்தாமதலைவனைக்கூடும் தொழிலும்வேறாய்த்தோன்றலால் இவர் மேற் கொண்டிருக்கும் விருப்பத்திற்குப் பத்தியென்றுபெயர். இப் பத்தியானது மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதரம் என நாற்பாற் படும். அரக்கானது வெயிலின் முன் இருந்து வெதும்புதல் போல் வது மந்ததரபத்தி, மெழுகானது வெயிலுக்கு எதிர்ப்படின் உருகு தல் போல்வது மந்தபத்தி, நெய்யானது சூட்டுக்கு இளகுதல் போல்வது தீவிரபத்தி. தைலதாரையானது, சிறிதும் இடை யறாது ஒழுகுதல் போல்வது தீவிரதர பத்தியாம். யோகநெறியை மேற்கொண்டோர் நாயகனோடு ஒற்றித்து நிற்றலால் அவர்கொண்ட விருப்பத்திற்குக் காதலென்றும், ஞானநெறியில் வேறற நிற்றலால் அன்பென்றும் பெயர்பெறும். இந்த ஞானநெறிதான் " அயராவன்

பின் அரன் கழல் செலுமே எனச் சிவஞானபோதத்தில் எடுத்துக் காட்டப்பட்டது,

ஞானநெறி யடைந்தோர் எய்தும் அன்பு, தலையன்பு, இடையன்பு, கடையன்பு என முத்திறப்படும். தலையன்பாவது, நாயகி நாயகனது பெயர் கேட்டவுடன் வசமழிதல்போல சிவபெருமான் மகிமையைக்கேட்ட மாத்திரையானே யானெனதென்னும் போதமறலாம். இடையன்பு நாயகனைக்கண்ட மாத்திரையில் வசமழிதல் போலச் சிவபெருமானைத் தரிசித்தமாத்திரத்தில் போதமறலாம். கடையன்பு, நாயகனைக் கூடினமாத்திரத்தில் வசமழிதல்போலச் சிவபெருமானைக் கூடினமாத்திரத்தில் வசமழிதலாம். கூடியபின் புறுதலே முடிந்ததாயிருக்க அதனைக் கடையன்பு என்றது யாது காரணம் பற்றியோ'எனின, காட்டுதும்.

ஞானாசிரியனது உபதேசத்தைக் கேட்ட மாத்திரையானே சிந்தித்தலும், தெளிதலும் உடனிகழ்ச்சியாய்த் தோன்றி நிட்டை கூடுதல் ஒன்று, கேட்டுப் பின்னர் சிந்திக்கும்போது தெளிதல் உடனிகழ்ச்சியாய்த் தோன்றி நிட்டை கூடுதல் ஒன்று, கேட்டு சிந்தித்துப் பின்னர் தெளியும்போது நிட்டை கூடுதல் ஒன்று என நிட்டைகூடும் விதம் முத்திறப்படும். அவ்வாறு வேறுபடுதற்கு அன்பின் வேற்றுமையே ஏதுவாம். அவ்வேற்றுமை முறையே தலை, இடை, கடை அன்பு எனப் பெயர்பெறும்.

எல்லாம் வல்ல இறைவனோடு இரண்டறக்கலந்து, பேரின்ப மெய்திய உத்தமச்சிவஞானயோகிகள் எல்லோரும்இறைவனைவேண்டிப்பணிந்தது இவ்வன்பைப் பெறும்பொருட்டேயாம். மறுமை குறித்த பயத்தாற் பணிபவர் மத்திமரென்றும், சிறுமை குறித்துப் பணிவார் அதமரென்றும், அன்பாய்ப் பணிபவர் உத்தமரென்றும் விதந்து கூறியுள்ளார். ஆகலின் அன்பாய்ப் பணிபவரே உயர்ந்தோராவர். அவரே யீறிலா இன்பமும் எய்துவர்.

(இன்னும்வரும்.)

சிவஞானம்பிள்ளை.

செய்யுளும் வசனமும்.

—(:)—

(க௮௫-ம் பக்கத் தொடர்ச்சி.)

மொழிகள் சுருங்கியும் பொருள் விரிந்தும் படிக்கப் படிக்க எவ்வளவு இன்பத்தை உண்டாக்கு கின்றன? தலைவியின் ஒருசார் மனநிலையை இதனினும் புலப்படுத்துவதெது? புலன் வழியே மனம் போம் இயல்பும், அப்புலன் தானெதிர்ப்பட்ட பொருண்மயமேயாமென்பதும், ஆகவே, தற்சூழ்ந்துள பொருள் எவ்வண்ணமோ அவ்வண்ணமே மனம் மாறுபடு மென்பதும், அங்ஙனம் மாறுபடினும் தன்னுடன் பிறந்த மனம் தான் கொண்ட கருத்து மேலானதன்றெனினும் சிறிது நேரமாயினும் நினைப்பை இருகூறுபடுத்துப் போராடு மென்பதும், அங்ஙனம் மனம் மறுகி நிற்பது தன்னை நோக்கியே என்று கொண்ட உள்ளன்புடையாட்கு உவகையும் உவகையை முற்றிலும் வெளிப்படுத்தா வண்ணம் சந்தேக வாயிலானே மறைக்கும் நாணமும் தலைத்தலை சிறந்த தன்மையை எவ்வளவு அழகாகக் காட்டுகிறது இச்சிறு செய்யுள்? "என்னையும் நோக்கி" என்னுஞ் சொற்றொடரின் வழியே ஆசிரியர் புகட்டுங் கருத்துக்கள் ஆழ்ந்து நோக்கு வார்க்கும் முற்றிலும் புலப்படாத் தகைத்தாம். "உணர் வழியப் போனசேர்ப்பன் கருத்தை உணரேன்" எனினும் தலைவி உணர்ந்ததாகவும் அதுவும் தன் மாட்டே கழிபேரன்பைக் காட்டிற்றென்பதும் குறிப்பா லுணர்த்த வில்லையா? "என்னையும் நோக்கி" என்பதோடமையாது "இணர்கைதைப் பூங்கானல் தன்னையும்" என்ற அடுக்கு உன்னுந்தோறும் "மதனனை தனையெவர்க்குங் கட்கரிதாகையினாலும் வசந்தகால மாதலானும் இடமது வாகையினாலும் இது காறுந் தீவினையேன் இத்துயரம் படவேண்டி யிருக்கையாலும் திரமாமென் மெய்ப்பாடு கண்டளவே அவன் வலியுஞ் சிதைந்த தன்றே" என்னும் மகாச் சுவேதையின் கருத்து இசைந்திருப்பதுந் தோன்ற வில்லையா? இவ்வளவு ஆழமுடைய செய்யுட்களைப் பழம்புலவர் இயற்றி இருப்பவும் மத்திம காலக்கவிகள் அவ்வண்ணம் இயற்றும் ஆற்றல் பெறவில்லை என்பதை நன்குணர முயல்வதே தனி ஆராய்ச்சியாய் முடியுமாகலின் இரண்டொரு காரணங்

களைமட்டும் ஈண்டு ஆராய்வாம். பண்டைக் காலத்தார் செய்யுட்களெல்லாம் உரை நடைபோன்ற செய்யுட்கள்? ஆகவே கருத்தை முற்றிலும் தெரிவித்தன. பெரிதும் அணிகளையும், அதனினும் சொல்லணிகளை முற்றிலும் தழுவாது பொருளை விளக்க இன்றிமையாத சில அணிகளே பெற்று இயற்கை நலத்தோடுங் கிளர்ந்தன; ஆகலின் மறைப்பொருளாகஇராதுகருத்து தெள்ளிதின்விளங்கிற்று.

உண்மை யுரைப்பதே கேட்போர் மனதைக் கவரும் ஒரு பெருஞ் சூழ்ச்சி, பண்டைப் புலவோர் உண்மை யுரைத்ததால் "பொய்யில் புலவர்" என்று சிறப்புப் பெயர் பெற்றார். அப்பெற்றியானும் உண்மை நெறி நின்ற அச்செய்யுட்கள் உணரும் மனதிற்குக் கழிபேருவகை பயந்தன. கவிதான் உரைக்குங்கவிதை பெரிதும் நீதியைப் புகட்ட வேண்டு மென்னும் கருத்தை வெளிப் படையான் விரித்திருப்பதாகத் தோன்றினால் அதுவே படிப்போர்க்குச் சிறிது நேரத்தில் அருவருப்பை உண்டாக்கும், ஆகவே, கதையைப் பற்றி விரித்துரைக்கும் புலவன் தன் கருத்தை உய்த்துணர வைக்கும் குறிப்புச் சொல்லானே தெரிக்கக் கடவன். பழைய புலவர் யாத்த செய்யுட்கள் பெரும் பாலும் அத்தகையனவே. "பேதைமைக் காதல் நாட்டிக் கைவிடுத்து" நன்னெறிப் படுக்கும் கருத்துடன் இயற்றப் பெற்ற இறையனார் அகப்பொருளே பழம் புலவரின் நோக்கம் நூல் நூற்கு மிடத்து எவ்வண்ண மிருந்த தெனத் தெள்ளிதிற் புலப்படுத்தும். பிற்கால மாகிய இடைக் காலத்து நூல்களெல்லாம் புராணங்களையே தமக் காதார மாகக் கொண்டு வடமொழிப் போக்கையே பெரிதுந் தழுவி, புனைந்துரை வகையை, நலம்படு வகையென மருண்டு உலவின. யாவ னொருவன் தன் கொள்கைகளைச் சரேலென விடுத்துப் பிறர் கோட்பாடுகளை அனுசரிக்கிறானோ அவன் அங்ஙனஞ் செய்வதால் யாதொரு ஊதியமும் அடையாமல் அதற்கு மாறாகப் பெரிதும் கட்டத்தையே அனுபவிக்கிறான் என்னும் பெரியோர் வாக்கும் பொய்யாமோ? திடீரென தன் வழக்கொழிந்து பிறமொழி வழக்கைக் கைக்கொண்ட தமிழர் தனசீர் குன்றுவ தாயிற்று. இங்ஙனங் கூறுவதனால் பிறமொழியை இகழ வேண்டு மென்பது எங் கருத்தன்று. தன் வழக்கத்துக்குத் தக்கவாறு பிறமொழிக் கருத்துக்களைக் கொள்ள வேண்டு மல்லது ஒருபாடைக் குரிய உடைப்

போன்ற செய்யுள் விதங்களையும் அலங்காரவகைகளையும் அனுசரிக்க லாகாது. உஷ்ணப்பிர தேசத்தில் வாழு மொருவன் சீதள தேய வாசியைப் போல உடுத்துக் கொண்டா லாவாது அல்லது பிற்கூறிப் பெற்றோன் முற்கூறிய பிறதேசத் தானைப்போல் தான் உடுத்துக் கொண்டா லாவாது அது இயற்கைக்கு மாறாய்த் தீங்கை விளைக்கு மாறு போல் ஒரு மொழியும் வேறொரு மொழியால் எத்தெந்த விதி களைப் பற்றவேண்டுமோ அவைகளை மட்டும் பற்றிப் பெரிதுந் தன் நட வடிக்கை களிற் குறைவுபட லாகாது.

பேசப்படும் பாடைக ளெல்லாம் நாளடைவே மாறுதல் அடை வது சகசமே. அங்ஙனம் மாறுத லடைவதை மொழியியல் வல் லோர் மாறுதலாகக் கொள்ளாது வளருவ தாகவே கொள்வார். இங் ஙனம் நடமாடித் திரியும் ஆங்கிலம் பிரஞ்சு ஜெர்மனி இத்தாலியன் முதலிய பாடைகளும், ஜப்பானியம் தமிழ் முதலிய கீழைத் தேய பாடைகளும் நாளா வட்டத்தில் வளர்ந்து கொண்டே வருகின்றன. வளருங்கால் இன்றியமையாச் சிலமாறுதலை அடைகின்றன. மாறு தல் இடையின்று உண்டான தாயின் சிறப்பும் சிறிது சிறிதாய் உண் டாயின் பெருமையுடனுந் துலங்குகின்றன.

இதுகாறும் செய்யுள் என்பது இன்னதென்பதும் மத்திம காலச் செய்யுட்கள் சிறந்துப் போன காரண மின்னது என்பதும் கூறினும். இனி சுருக்கமாக தமிழிலுள்ள பாக்களின் வகை களையும் அவ்வகை கட்குரிய இனங்களின் பெயரையும் இவ்விடத்து எடுத்து மொழிவது மிகையாகும் ஆகலின் செய்யுள் என்பது இன்னது என் னும் முறையினை ஆராயுஞ் சில கருவிகளை உரைப்பாம். இக்கருவி கள் இன்ன தன்மைய என ஆராயு முன்னர் நாம் அறிய வேண்டிய விடயம் ஒன்றுளது. எவ்வகைய நூல்களை இக்கருவிகளைக் கொண்டு ஆராய வேண்டும் என்பதே.

ஆய்ந்துழி, இலக்கண நூல்களும் பாக்களாலாயனவே எனின் அல்ல. வைத்தியம் மாந்திரீகம் முதலிய நூல்களும் செய்யுளானே யாக்கப்பெற்றனவே எனின் அவைகளும் அல்ல. மற்றையவேதாந்த சித்தாந்த நூல்களோ எனின் அவைகளும் பிறிதும் இவ்வகைய நூல்களும் அல்ல. இரசாயனம் முதலிய சாத்திரங்களும் அல்ல.

தருக்கம் ஸ்மிருதி முதலியனவு மல்ல. அங்ஙன மெனின் மற்றும் அந்நூல்கள் தாம் யாவை? இலௌகிக விடயமான நூல்கள் அல்ல. வைதீக சம்பந்தம் உடையனவு மல்ல, உண்மைகூறுங்கால் இவ்விரு விடயங்களும் அந்நூல்களில் இருந்தாலும் அந்நூல்களை என்றும் அழியாதனவாச் செய்வது அவைகள் மாத்திரம் அல்ல. இவை களுடன் கூடி விசேடணமான ஒரு கருத்து உண்டு. அக்கருத்தைக் கொண்டே அந்நூல்கள் யாக்கப் பெற்றன. சிந்திக்கச் செய்வது அதுவே. முக்கியதொழில் இத்தகைய நூல்களை ஆராய்வன இலக்க ணம் தருக்கம். இலக்கணம் கூறுவது; பத்துக்குற்றம், பத்துஅழகு. இப்பத்தழகிற் சேர்ந்தனவுஞ் சோரதனவுமாய வேறுசில அழகு களும் உள்ளன. அவைகளில் முக்கியமாயின:—செறிவு, தெளிவு, இன்பம், ஒழுகிசை என்பனவாம். தருக்கத்திற் கூறப்படுவன:—

1. நூலாராய்ச்சி இலௌகிகத்தினின்றும் தனித்தியல வேண் டியது. பொருள் தேடுவதற்கு முக்கிய ஆதாரமாக ஒரு நூல் இருப் பினும் உயர்ந்தகருத்துக்கள் தன்னகத்தே பொருந்தியிராதெனின் அது ஆராய்ச்சிக் கேற்றதன்று.

2. சிற்சில அமைப்புகளில் இலௌகிக அறிவைக் குன்றச் செய்வதா யிருப்பினும் ஒரு நூல் மேதக்க கருத்துக்களை உடைய தெனின் அந்நூல் ஆராய்ச்சிக் கேற்றது.

3. சாதாரண மாக உலகில் ஒருவனுக்கு நன்மையைப் பயக் கக் கூடியதெனினும் ஆழ்ந்த கருத்துக்களுக்கு ஒருநூல் எவ்வளவு தூரம் தடை செய்கின்றதென அறிதல் வேண்டும்.

4. ஒரு நூலை இயற்றிய ஆசிரியன் இருந்த காலத்தின் அர சாங்க நிலைமை மதநிலைமை கல்வி நிலைமை வியாபார நிலைமை ஜாதி நிலைமை சனநிலைமை முதலிய நிலைமைகள் எங்ஙனம் இருந்தனஎன ஆராயவேண்டும்.

5. அவ்வாசிரியனின் சீவ சரிதைக்கும் அவன் காலத்து உலக சரிதைக்கு முள்ள சம்பந்தமும் ஆராய வேண்டும்.

இம்முறையை எவ்வளவிற் கெவ்வளவு கையாளுகின்றார்களோ அவ்வளவிற் கவ்வளவு ஒரு நூலின் கருத்துக்களை அறிய முடியும்

இக்கருவிகளைக் கொண்டு சோதிக்கு மிடத்து செய்யுளுக்கே எனப் புலப்படும் சில இன்றியமையாக் குணங்கள் காணப் படுகின்றன. அவையாவன;—

1. மனோபாவம் அல்லது தற்குறிப்பு.
2. தன் சாதியைப் பற்றிய நம்பிக்கை.
3. நற்குண மமைதல்.
4. சிருட்டித்தல்.
5. கருத்தடங்கிய இடத்திருந்து ஆனந்த முறச்செயல்.

இக்குணங்களிற் சில வசனத் திற்கும் உண்டு. அவைகளை நோக்குவாம்.

1. மனோபாவம் அல்லது தற்குறிப்பு:—ஒருவாறு மனத்தின் தொழில் முப்பகுதி யுடைத்து என்னலாம். அளவறச் சிந்தித்தல், பகுத்தறிதல், அறிந்தவழி நிற்கத் திடங்கொள்ளல், நாம் துயிலுறு மமையத்து பகுத்தறியும் வலிகுன்ற, அதன்வழித்தாய திடங்கொள்ளலும் மறைய, அளவறச் சிந்தித்தல் ஒரு பகுதியே மேலாடி நிற்கும். இப்படியே நேரிடுமிமைபத்துப்பிறப்பதுதான் கனவு ஒருவன் விழித்துக் கொண்டிருக்கும் பொழுதே மனத்தின் சித்திக்கும் தொழில் மேம்பட்டால் உருவெளி தோன்றும். இங்ஙனந் தோன்றும் உருவெளிகளை நாளடைவில் மனத்துள்ளே கண்டு கண்டுதன் பகுத்தறி விழக்காது சுயநலமான மனக்கிளர்ச்சியுடன் அவைகளைக் கருதாது அத்தோற்றங்கள் எப்பொருள்களின் பிரதி பிம்பங்களென்பதை யாரு முணர அறிவுடையான் ஒருவன் செவிக் கினிமையான ஓசை தன்னிடத்தே பொருந்தும் பாடையால் உரைப்பதே செய்யுள். ஏனைய வெல்லாம் காரிகை என்னுங்களர் நிலத்துப் பிறந்த சார மற்ற பாக்கள். ஸால்டயோவின் பூர்வ ஆசிரியர் சோராஸ்டர் கூறுகிறார்:—"கவிகள் என்போர் பொருள்களை என்றும் நிலைக்க மாற்றுபவர். அவர் தொழில் புலப்படா இபற்கைகளில் புலப்படும் உருவங்களை அளித்தல் உலகில் தோற்றமாய கட்டுப் பாட்டினுக்குப் புலப்படா விஷயங்களைத் தீட்டல்" இவர், சொல்வதின் முக்கிய கருத்து என்னையோ எனின் உலகம் தோன்றுவது ஆழ்ந்த கருத்துக்

களைப் புலப்படுத்தவே. மலைகள் ஆறுகள் சமுத்திரங்கள் சூரிய சந்திரர்கள் விலங்கினங்கள் முதலியவைக ளெல்லாம் மறைந்துள்ள சில நியாயங்களால் பிறந்துள்ளன. இக்கருத்துக்கள் புறப்படும் இடத்திற்குக் கூட்டிச் செல்பவன் கவி. அவ்விடங் கண்டு மயங்காது உட்புகவேண்டும். இக்கருத்துக்கள் பிறக்கும் இடம் யாண்டுள்ளது? நம்மிடத்தே உள்ளது. ஆகவே, நம்மை நமக்கேகாட்டுபவன் கவி. இது மட்டுமோ? காணப்படும் உலகை தன்மன மெனும் மின்சாரத்தால் பிரித்து, அங்ஙனம் பிரிகின்ற பலவிஷயங்களும் பற்பல கருத்துக்களே எனவும் இவைகள் தோன்றக் காரணமாய இடம் தன்னிடத்தும் உள்ளது என்றும் இங்ஙனம் பிரிந்த கருத்துக்கள் எல்லா விடத்தும் உள்ளன வென்றும் இன்னும் இடை வெளியின்றி நிரம்பியிருப்பன வாகவும் காட்டுகிறான். பிரதிமை செயயும் உயர்ந்த சிற்பியும் நல்லுருவம் உள்ளது போல் புனையும் ஓவியவல்லவனும் உயிரற்ற நரம்புக் கருவியை தன்கையால் தைவந்து மனமுருகி "நரம் பொடு வீணை நாவின் நவின்றதோ" என்று கண்டோர் களிசிறப்ப உளங்கொண்டு பாடும் இசைவல்லுநனும் காமச்சுவை புலப்படாது கருத்தைக் கவர்ந்து சதியுற மிதிக்கும் அரங்கிடை மகளும் மிக்க அழகிய எப்பொருளும கவிகளே. மனமுவந்த அனுமனுக்கு தன் அழகாலும் குணங்களாலும் நயமொழிகளாலும் பலதிறப்பட்டகருத்துக்களைவெட்டி முடிவில் உண்மையையும் அறிவுறுத்தி "என்னலதில்லை என்னை ஒப்பென எனக்குத் தந்தான்" எனவும் "உன்னல தில்லை உன்னை ஒப்பென உனக்கு நேர்ந்தான்" என்றும் சொல்லும்படி நடந்த சீதையும் உத்தமக் கவியே. (தொடரும்.)

கரந்தை: T, S. முருகேசன்.

இதோபதேசம்.

1. தையலார் மயலிற் பட்டோர் தமக்கொரு மதியுண்டாமோ.

2. ஐபன தருளைப் பெற்றார்க்கதிசய மிதென்கொல் மூன்று வையமுந் தொழிலுஞ் செய்ய வல்லவ ரிவரோயன்றே.

3. அற்பரா னவர்க்குச் செல்வ மல்லது பகை வேறுண்டோ.

4. ஈசனுக் கிழைத்த குற்றந் தேசிகன் எண்ணித்தீர்க்கும் தேசிகற்கிழைத்தகுற்றங் குரவனே தீர்ப்பதன்றிப், பேசுவதெவனோ.

ஓர் விடையாராய்ச்சி.

வி. பாரதம் பதினான்காம் போர்ச்சருக்கம் 164-ம் கவியில் ஓர் சந்தேகமேற்பட்டதால் "ஐயவினா" வென்னும் தலைப்பின்கீழ் அக் கவியை வரைந்து எனது சந்தேகத்தை நிவர்த்திப்பீர்களென வைசியமித்திரன் மூலமறிவித்திருந்தேன். அதற்கு விடையாக 17—9—14. வைசிய மித்திரனில் நமது நண்பராகிய விஜய நாராயணம். பி. முத்திருளப்பமார்த்தாண்டம் பிள்ளையவர்கள் (ஓர்விடை) என்னும் தலைப்பின்கீழ் எனது சந்தேகத்தை நிவர்த்திக்கிறார்கள். அவ்விடையில் ஆராயத்தக்கன சிலவுள.

திருமாலின் சக்கராயுத முண்மையிலொரு கோடிசூரியப்பிரகாச முற்றிருக்குமாயின் சூரியனு மச்சக்கரத்திற் காற்றொளி மழுங்கிப்போவதோடு பூவலகு நீறுபட்டுப் போகுமன்றோ. ஆகவே (கோடிசூரியனென்பது) இளஞ்சூரியனெனவு மீற்றுச் சூரியனெனவும் பொருள்தந்து காலையிலெழுஞ்சூரியன், மாலையில் விழுஞ்சூரியன், எவ்விதம் பிரகாசிக்குமோ அவ்விதமே திருமாலின் சக்கராயுதமும் பிரகாசிக்குமென்பதாயிற்று.

மேலும், அக்களம்போலச் சிவந்தனவக் குடபாலெங்குமென்றதாற் சூரியனைச் சக்கரம் மறைத்த போழ்தெங்கு மிரத்தமயமாயினவென்னும் பொருள் தரலானும் சக்ராயுதங் குளிர்ந்த தன்மையிற் செம்மையிற் பிரகாசிக்குமென்பதாயிற்று. கோடி, இளமை, ஈறு என்பதொரு பொருட்சொற்களாம், என்று நமது நண்பரவர்கள் கூறி விடைதருகிறார்கள்.

ஓராயிரங் கிரணங்களையுடைய சூரியன் கடூரமாகும் வெப்பத்தைத் தரக்கூடும். ஓராயிரங் கிரணங்களையுடைய சூரியனுக்கு இத்துணை வெப்பமிருப்பின், ஆயிரங்கோடி சூரிய கிரணங்களுக்குச் சமதையாகிய திருமாலின் சக்கராயுதத்திற் கெத்துணை வெப்பமிருக்கலாம்? அத்துணை வெப்பத்தோடு திருமாலின் சக்கராயுதம் சூரியனை மறைக்கப் புகுங்கால், சூரியனு மொளிமழுங்கிப் போவதோடு பூவுலகும் நீறுபட்டுப் போகுமென்பதி லையமில்லைதான்.

சுடரொளியாகிய சோதிக் கெரிக்குந்தன்மையுளதேல், திருமாலின் சக்கராயுதத்திற்குச் சூரியனை மழுங்கச்செய்து பூவுலகை நீறுபடுத்துந் தன்மையுமுளதாம்.

முச்சுடர்ச் சோதியின் பிரகாசமெவ்வளவு குளிர்ச்சியோடொளிவீசுமோ வவ்விதமே ஆயிரங்கோடி சூரிய கிரணங்களோடு சக்கராயுதமுங் குளிர்ந்த தன்மையிற் பிரகாசிக்கும்.

பகல் நேரத்திற் பெய்திட நீர்கொருங்கு கூடிய முகில்கள் நெருங்கிக் காரிருள் காட்டுங்கால், சிலவேளைகளிலுண்டாகும் பேரிடிக்கு முன்னும் வெள்ளொளி மின்னிற்றுச் சுடுந்தன்மையுளதேல் திருமாலின் சக்கராயுதமும், ஆயிரங்கோடி சூரிய கிரணங்களோடு பூவுலகை நீறுபடுத்துந் தன்மை பெற்றுளதாம்.

வெள்ளொளி மின்னிற்கும் முச்சுடர்ச் சோதிக்குங் கடூரவெப்பத்தோடெரிக்குந் தன்மையல்லாது குளிர்ந்திடுந் தன்மையுளதேல், திருமாலின் சக்கராயுதமும் ஆயிரங்கோடி சூரிய கிரணங்களோடு குளிர்ந்த தன்மையில் வெண்மையிற் பிரகாசிக்கும்.

(கோடி சூரியனென்பது) இளஞ்சூரியனெனவு மீற்றுச் சூரியனெனவும் பொருட்பெற்றுக் காலையிலெழுந்த சூரியன், மாலையில் விழுஞ்சூரியன் எவ்விதம் பிரகாசிக்குமோ அவ்விதமே திருமாலின் சக்கராயுதமும் பிரகாசிக்குமென்பதாயிற்று. என்று கூறுதலே பொருந்தியதெனினும், ஓராயிரங் கிரணங்களோடு கூடிய தினகரனை இளஞ்சூரியன் போன்ற திருமாலின் சக்கராயுத மெவ்விதம் மறைத்துச் செந்நிறங்காட்டும்? தினகரனின் பிரமாணத்திற்குச் சக்கராயுதத்தின் பிரமாண மிகுந்திருப்பின் சூரியனின் கொடுந்தன்மையுள்ளடங்கச் சக்கராயுத மேல்நின்று மறைத்துச் செந்நிறமாகுந் தனது குளிர்ந்த தன்மையால் "அக்களம் போலச்சிவந்தனவக் குடபாலெக்கும்" என்பதற்கேற்ப மாலையில் விழுஞ்சூரியன் போன்று சிவந்து காட்டும். ஆகவே திருமாலின் சக்கராயுத முன்மையிற் செம்மையாயினும், சூரியனது பரிமாணத்திற்கு மிகுந்திருப்பின் ஓராயிரங் கிரணங்களோடுங்கூடிய சூரியனை மறைக்குந் தன்மையும் செவ்வானங் காட்டுந்தன்மையுஞ் சக்கராயுதத்திற் கேற்றதே. சூரியனின் பரிமாணத்திற்குச் சக்கராயுதத்தின் பரிமாண மெவ்வளவு

கூடியதாகும். அவ்விரண்டிற்கு முள்ள பேதாபேத முறைப்பினை ஒப்பத்தக்கதே. சூரியனின் பரிமாணத்திற்குச் சக்கராயுதத்தின் பரிமாணங் குறைந்திருப்பின் சூரியனை மறைக்குந்தன்மை சக்கரத்திற்கின்றியமையாததே.

கோடி, இளமை, ஈறு என்பதொரு பொருட்சொற்களாவதால் இளஞ்சூரியனெனவும் ஈற்றுச் சூரியனெனவும் பொருளமைத்து காலையி லெழுஞ்சூரியன் மாலையில் விழுஞ்சூரியன் எவ்விதம் பிரகாசிக்குமோ வவ்விதமே திருமாலின் சக்கராயுதமுங் குளிர்ந்த தன்மையிற் செம்மையிற் பிரகாசிக்குமென நமது நண்பரவர்கள் விடைதந்திடினும், விடையாராய்ச்சி இடந்தரவில்லை. ஆகவே, கோடிசூரியப் பிரகாச மென்பது நூறுலட்சஞ் சூரிய பிரகாசமென்றும், ஒரு சூரியப்பிரகாசத்திற்கு ஓராயிரங் கிரணமிருப்பின் நூறுலட்சம் சூரியப்பிரகாசங்களுக்கு ஆயிரங்கோடி கிரணங்களிருக்குமென்றும், அத்தனை கிரணங்களும் ஓராயிரங் கிரணங்களோடு கூடிய சூரியனின் கடோமாகும் வெப்பம் போலல்லாது ஆயிரங்கோடி கிரணங்களோடு குளிர்ந்த தன்மையிற் பிரகாசிக்குமென்றுந் தீர்மானிக்கப்பெறுமன்றோ?

நமது நண்பரவர்களின் கருத்துக்கு நமது கருத்து மாறுபட்டிருப்பதால் நமது நண்பரவர்களேனு மற்றெவர்களேனும், வித்தியாபாநு, வைசியமித்திரன் பத்திரிகைகளின் வாயிலாக தக்கவாறு விடையிறுத் தெமதையத்தைநீக்குவார்களென்றெதிர் பார்க்கிறேன்.

அரு. பழ. லெ. பழநியப்பசெட்டி,

தோஞ்சை.

காக்கை ஓர் பறவை.

(௧௮௮-ம் பக்கத் தொடர்ச்சி.)

சூரபத்மன் என்னும் அசுரனுக்கு அஞ்சித் தேவேந்திரன் சீகாழியின்கண் வந்திருந்து சிவார்ச்சனையின் பொருட்டுஉண்டுபண்ணிய நந்தனவனம்செழிக்குமாறு நாரதமுனிவர்சொற்படிவிநாயகப் பெருமானை வேண்டாநின்றனன்; ஐங்கரக் கடவுள் அகமகிழ்ந்து காக உருக்கொண்டு சென்று, 'சந்தனப் பொதியத் தடவரைச் செந்தமிழ்ப்பரமாசாரியன்' ஆகிய அகத்தியமுனிவர் உத்தர திசையினின்றும் தக்ஷிண திசைக்குச் செல்லுங்காற் கொடுபோந்த கங்கை நீர்க் கரகத்தைக் கவிழ்த்தனர்; அதுதான் காவிரி நதியென்ற பெயருடன் போந்து அப்பூங்காவனத்தைத் தழைப்பித்து இந்நில உலகின்கண் இயங்குகின்றது. இது கந்தபுராணத்திற் பரக்க விரிந்திருத்தலின் "கொடியுருக்கொண்டு முன்னங் குண்டிகையிருந்து *பிள்ளை, படிமிசைபதனைத் தள்ளப் பரந்தகாவிரி" என்ற அந்நூற் செய்யுளினும், "சூரகுலாதிபன் றாய்மலர் நந்தனம், பெருக வார்கடற்பெய்த வயிற்றினேனுன், கரக நீரைக் கவிழ்த்த மீதகரி" என்ற பிரபு லிங்கலீலைச் செய்யுளாலும் சுருக்கமாக விளக்கினோம்.

இந்நதிக்கு மேற் காரணத்தாற் காக நதியென்னும் பெயர்; அன்றியும் "தவாநீர்க் காவிரிப் பாவைதன்றாதை, கவேரனாங்கிருந்த கவேர்வனமும்" என்ற மணிமேகலை, ௩; ௫௫; ௫௯-வரிகளாலும் காவிரியின்வரலாறு போதரும். காவிரிப்பூர்ப்பட்டினத்திற்குக் "காக நதி" என்றுவந்த நாமத்தையும் கவனிக்கற்பாலது. நிற்க.

இவ்வியாசத்தின் முன்னுரையில் 'முதலியனவை' - என்றதினால் அடியில் வருமாறு இன்னனம் சில வரைகின்றேன்.

காக்கை, நவக்கிரக தேவதைகளில் ஒன்றாகிய சனீசுரனுக்கு வாகனம். இது அந்த மந்த தேவனுக்கு வந்த 'காகவாகனன்' என்ற பெயரானே விளங்கும்.

---

* பிள்ளை - பிள்ளையார், கரும்பிள்ளை.

அன்றிக்கே உதாரணச் செய்யுள்;

"வேலவனை வேங்கைமர மாக்கிவைத்தாய்.........காலவனை யான்றொழுதே னெனைத் தொடாதே சனியனே காகமேறுந் தம்பிரானே" (சனீசுரப்பத்து.) எனவும்,

"தண்டாளத் தியல் வகுப்பிற்.........காக வாகனர் திண்டோ ளில்,............(திருவாலவா யுடையார் திருவிளையாடல்) எனவும் வரும்.

காக்கைகள், நான்கு பக்கங்களிலும் சுழன்று பார்க்குங் கண்களும், அக்கினிபோலே பற்றி எரிகின்ற பசியும், குழற்சியுற்றஉரோமங்களும், மிகுந்த பயமும், மனதில் அன்பில்லாமையும் உடையன.

உதாரணச் செய்யுள்: சிலேடை.

"சுழன்று நோக்குங் அணைநெடுங் கண்ணினள்
அழன்றெழுப்பு மரும்பசித் தீயினள்
குழன்ற கூந்தலாள் கூறும் பயத்தினள்
கழன்ற வன்பினள் காகி மடந்தையே"

(மதனசாத்திரம், காகாத்துவ மடந்தையின் இலக்ஷணம்.)

மனதில் அன்பில்லாமை, முன் காக்கையின் மனம் இரக்கமில் லதென்றதற்கும் ஏற்கும்.

காக்கை, சிங்கார வனங்களிற் குயில்போலப் பிறந்து வளர்ந் தாலும் அந்தக் கோகிலத்தின் பாகார்ந்த தொனிக்குக் கா, காஅல் லது "மாமரத்திற், காக்கையிருந்து ககககென" என்றபடி கஃ,கஃ என்னும் சத்தம் இணையாகா. காக்கை, காலத்திரயத்தும் ஜலத்தில் ஸ்நானஞ் செய்யினும் தவளநிறம் அடையா. காக்கை, அற்பத்தன் மையுடையது.

உதாரணம்:—"சிங்கார வனமதி லுதிப்பினுங் காகமது நீஞ் சொல்புகல் குயிலாகுமோ" எனவும், "முக்காலுங் காக முழுகிக் குளித்தாலும்.........கொக்காகுமோ" எனவும், "மென்காற் சிறை யன்னம் வீற்றிருந்த மென்மலரைப், புன்காகங் கொள்ளத்தான் போனாற்போல்" எனவும் முறையேவரும்.

(குமா, சத; சூ, தூ; ஈனவெண்பா)

காக்கை, முதிர்வேனில் அதாவது ஆனி, ஆடி மாதங்களிற் கல்வி விரும்பி ஆணும் பெண்ணும் கூடிக் களித்திருக்கும்; பின் அம்மாதங்களில் முட்டையிட்டு அடைகாத்துக் குஞ்சு பொரிக்கும். இவ்வியல்பிற்றே, காடை, வலியான், வானம்பாடி, கவுதாரி என்ற பறவைகளும்.

உதாரணம்:—(முதிர் வேனிற் காலவியல்)

ஒன்பதுவகை மணிகளிற் சிறந்த வயிரமணியின் நால்வகைக் குற்றங்களில் ஒன்றினுக்குக் காகபாதம் என்றுபெயர். உதாரணம்:

"காக பாதமுங் களங்கமும் விந்துவும், ஏனையுநீங்கி" (சிலப்பதிகாரம், ஊர்காண்காதை, ௧௮௦, ௧௮௧, எனவும், 'குற்றம் பன்னிரண்டு' "சுசிர மலம்.........காக பாதம்......ஈராறும் வயிரத்திழிபென மொழிப" 'பிறன்' "காகபாத நாகங்கொல்லும்" (ஷை, ௧௮௦) விசேடவுரை. எனவும், [காகபாதம்............வயிரம்] வே. சாமிநாதையரவர்கள் குறிப்புரை. ஷை, ௧௮௦) எனவும் வரும். அரதனமணியின் ஐங்குற்றத்தி லொன்றைக் காகபாதம் என்ப. "பிறபிறச் சார்பு புள்ளி புள்ளடி பிறங்குகீற்று, மறுவெறு தாரசமென்ன வகுத்த வைங்குற்றந் தள்ளி" புள்ளடி-காகபாதம். (திருவிளை,மாணிக்கம், ௨௨) எனவரும்.

'காக்கை ஏறப் பனம்பழம் விழ' என்ற கருத்தமைந்த 'காகதாளியம்' என்னும் நியாயம் நந்தமிழ் நூல்களில் உலாவுகின்றதையும் கவனிக்கற்பாலது.

இன்னும் காக்கையின் பெயரோடு பலவகைப் பொருள்கள் விளங்குகின்றன. அவைகளிற் சில இங்ஙனம் வரைகின்றன்.

ஒருவகைப் பேய்க்குக் காகபிசாசு என்றும், ஒரு புதருக்குக் காக்காய்க் கொல்லி என்றும், ஒருவகைச் சோழத்திற்குக் காக்காய்ச் சோழம் என்றும், பொன்னிறப் பிசின்சாதி அல்லது ஒருவகை வர்ணத் தகட்டுக்குக் காக்காய்ப்பொன் என்றும், ஒருமீனுக்குக் காக்காய்மீன் என்றும், மனுஷரில் ஒருவகைச் சாதியார்க்குக் காக்காய் மூக்கர் என்றும், மனிதரிற் சிலர்க்குண்டாகும் ஒருநோய்க்குக் காக்

காப் வஙிப்பு என்றும், ஓர் இலக்கண நூலுக்குக் காக்கை பாடினியம் என்றும், அவ்விலக்கண நூலாசிரியருக்குக் காக்கைபாடினியார் என்றும், பஞ்ச பட்சி நூலில் உகரத்திற்குக் காக்கை என்றும் பெயர்கள் விளங்கும்.

முடிவுரை.

போர்டு எலிமெண்டரி பாடசாலைகளுக்குக் காருண்ணிய கவர்ன்மெண்டார் ஏற்படுத்திய நவீன போதனா முறைகளில் இயற்கைப் பொருட்பாடமும் ஒன்றாகலின் அது காரணமாகக் காக்கையைப் பற்றிய அரியவிஷயங்கள் நந்தமிழ் நூல்களில் விரிந்து கிடந்தவற்றுள் என் சிற்றறிவிற் கெட்டியவாறு சிலதந்து எனதுவேலை ஒழிவின் காலக்கழிவு வீண்போகாது இந்த விஷயத்தை எழுதி வெளியிட முயற்சியூட்டிய எல்லாம் வல்ல இறைவன் திருவருளை என்றும் மறவாது இறைஞ்சுகின்றனென்,

ஐ. எம். முருகைய வாத்தியார்.

தலைமை. B. E. ஸ்கூல், செங்கிபட்டி. தஞ்சாவூர் தாலூகா.

புத்தகக் குறிப்பு.

போதுதர்ம சங்கீத மஞ்சரி:-இது பத்மாவதி முதலிய சிறந்ததமிழ் நாவல்கள் எழுதியவரும்; தமிழ்ப்பாஷையிற் பெரிதும் அபிமானங் கொண்டு ஆராய்ந்து வருபவரும், ஆகிய ஸ்ரீமத் அ. மாதவையரவர்களால் ஆக்கப்பெற்றது. சென்னை ஐக்கோர்ட்டு ஜட்ஜாக னம் ப்ரும்ம ஸ்ரீ சேஷகிரி ஐயரவர்கள் எழுதிய சிறந்த முகவுரையுடன் மதுரைத் தமிழ்ச்சங்கம் அச்சியந்திர சாலையில் பதிப்பிடப் பெற்றது. தமிழ் வேதமாகிய தேவார திருவாசகப் பாக்களின் சந்தப் போக்கையும், தாயுமானவர் பாடல், நந்தனார் சரித்திரக் கீர்த்தனை முதலியவற்றின் வர்ணமெட்டுகளையும்அமைத்துள்ள பதங்கள், கீர்த்தனைகள், கும்மிகள், சிந்துகள், விருத்தங்கள் முதலியனவாகச்சிறுவர் சிறுமிகள் உற்சாகத்துடன் பாடிக் களிக்கும் வண்ணம் பாரதமாதா துதியும், பிரார்த்தனையும் மற்றும் பல இந்தியர் பெருமைகளையும் விளக்கி இயற்றப்பெற்றுள்ளது. தமிழ் மக்கள் படிக்கப் படிக்க இனிக்குந்தன்மை வாய்ந்துளது. இந்நூலை எமது பார்வைக்கனுப்பிய நூலாசிரியரவர்களிடத்து நன்றி பாராட்டுகின்றோம். இதன் விலை 4 அணா. வேண்டியோர் சென்னை திருவல்லிக்கேணி ஸ்ரீநிவாச வரதாசாரி அண்டு கம்பெனியாரவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

பத்திராதிபர்.

சிவமயம்.

சிவஞானசித்தியார் சுபக்கம்

மூலமும் பொழிப்புரையும்.

சைவசித்தாந்த சாத்திரம் பதினான்கனுள் ஒன்றும், சிவஞான போதத்துக்கு வழி நூலாக ஸ்ரீ அருணந்திசிவாசாரியர் திருவாய் மலர்ந்தருளியதும் ஆகிய சிவஞானசித்தியார் சுபக்கத்துக்கு திருவாவடுதுறை ஆதீனத்துச் சைவப்பிரசாரகராகிய தூத்துக்குடி ஸ்ரீ பொ. முத்தையபிள்ளையவர்கள், ஸ்ரீமாதவச்சிவஞான யோகிகள் உரையைத் தழுவி விரித்து விளக்கியெழுதிய உரைப்புத்தகம் ஒன்று, இப்பொழுது செவ்வையாக அச்சிடப்பெற்றுள்ளது. இவ்வுரை, முன்னையுரையாசிரியர் பலர் அரிதின் விளக்கிய கருத்துக்களையும் வேறு சில விசேடங்களையும் யாவரும் எளிதிலுணர்ந்து கொள்ளுதற்கு மிகஉபயோகமாகும்.

ஒவ்வொரு செய்யுட்கும் தனித்தனி அவதாரிகையும், கொண்டுகூட்டும், பொழிப்புரையும், விசேடக்குறிப்பும் இதன்கண் உள்ளன. சைவசம்பந்தமான பல ஆசங்கைகளுக்கு அதன்கண், செவ்வையாகச் சமாதானங்கள் எழுதப்பட்டுள்ளன, விஷய அகராதி முதலியவை விளக்கமாக முன்னர்ச் சேர்க்கப் பெற்றிருக்கின்றன.

இப்புத்தகம் நயமான கிளேஸ் கடிதத்தில் டிம்மி எட்டுப் பக்கங்கொண்ட 45பாரத்தில் அச்சிட்டு உயர்ந்த காலிகோபயிண்டு செய்யப் பெற்றிருக்கிறது. யாவரும் எளிதில் வாங்கிப் படித்தற் பொருட்டுப் புத்தகம் ஒன்றுக்கு ரூபா 1—8—0 ஆகவிலை ஏற்படுத்தியிருக்கிறது. தபாற்கூலி வேறு. வேண்டுவோர் அடியிற்கண்டவர்களிடத்துப் பெற்றுக் கொள்ளலாம்.

1. பொ. முத்தையபிள்ளை.
திருவாவடுதுறையாதீனச் சைவப்பிரசாரகர்,
பங்களாத்தெரு, மேலூர், தூத்துக்குடி.

2. மானேஜர், விவேகபாநு அச்சியந்திரசாலை, மதுரை,

3. இ. மா. கோபாலகிருஷ்ணக்கோனார்,
புக்செல்லர், புதுமண்டபம், மதுரை.

சமாசாரக் கொத்து.

மேலைச் சிவப்பட்டி சன்மார்க்க சபை:—9—10—14ல். மாலை 4-மணிக்கு இச்சபையின் மாதக்கூட்டம் கூடிற்று. உள்ளூர் வெளியூர்களிலிருந்து பல அன்பர்கள் வந்து கூடினர். மகிபாலன்பட்டி வித்வான் ஸ்ரீ மு. கதிரேசச் செட்டியாரவர்கள் அக்கிராசன மேற்றனர்.

இப்பொழுது ஐரோப்பா கண்டத்தில் நடைபெறும் யுத்தத்தில் நம்மை ஆட்சிபுரியும் மாட்சிமை தங்கிய பிரிட்டிஷாருக்கு ஜயமுண்டாக வேண்டுமென்று கடவுள் பிரார்த்தனை சபையோர்களால் செய்யப்பெற்றது. பின்னர் சபையார் விருப்பின்படி அன்று வேறு உபந்நியாஸங்களை நிறுத்தி அக்கிராசனாதிபதியவர்களால் கம்பராமாயண அருஞ்செய்யுள் விளக்கம் என்னும் விஷயம் மிக இனிமையாக மூன்று மணி நேரம் பிரசங்கஞ் செய்யப்பெற்றது. காரியதரிசியவர்களால் வந்தனங்கூறப்பட்டுச் சபை நிறைவேறியது.

மிகப்பெரியதோர் கடியாரம்:—ருஷியாவில் செண்பீற்றர்ஸ்பர்க்கில் 95-முகப்புக்களையுடைய பெரிய கடியாரமிருக்கின்றதாம். அது உலகத்திலுள்ள முப்பது சிறந்த தேசங்களின் நேரத்தையும் பூமியினதும் கிரகங்களினதும் அசைவையும் காட்டுகின்றதாம்.

* * *

ஆதனகயிற்று ரயில்வே:—காஷ்மீரத்தில் 75-மைலில் ஆரத்துக்கு கயிற்று ரெயில்வே கட்டப்போகிறார்கள். இது இமயகிரி பர்வதத்தின் மேலிருக்கும் பஞ்ஞாப் மைதான வெளியைக் கலக்கும். இது கட்டி முடிந்தால் உலகத்திலுள்ள எல்லாகயிற்று ரெயில்வேகளினுஞ் சிறந்ததாயிருக்கும்.

* *

ஓர் நல்லமுத்து:—பம்பாய் நகரில் ஒருலட்சத்து ஐம்பதினாயிரம் தங்கப்பவுன் விலைபெற்ற ஓர் நல்லமுத்து ஓர் ரத்னவியாபாரியிடமிருக்கின்றதாம்.

பத்திராதிபர்.